Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



நிலக்கோட்டைசிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர் : திரு.து.மோகன்குமார் பி.இ.,

ந.க.எண்.294/2024/த.எ., நாள்.18-10-2024.

பொருள் : மனைப்பிரிவு நகர் ஊரமைப்பு துறை – திண்டுக்கல் மாவட்டம் – நிலக்கோட்டை பேரூராட்சி எல்லைக்குட்பட்ட நிலக்கோட்டை கிராம சர்வே எண்.394/1B2, 394/2A2 and 394/5 ல் ஏக்கர் 1.59 (6444.00 சதுர மீட்டர்) 30 மனையிடங்களுக்கு புதிதாக உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுகளுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது – பேரூராட்சியின் இறுதி ஒப்புதல் அங்கீகாரம் வழங்கி உத்தரவிடுதல் – தொடர்பாக.

பார்வை : 1) திண்டுக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் ந.க.எண்.06XME49F/2023/TCP, நாள்.07.09.2023 என எண்ணிடப்பட்ட அனுமதி எண்.SWP /DTCP/ திண்டுக்கல்/ மனைப்பிரிவு 164/2023.

2) தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் 2019, விதி 47(11)–ன்படியும் அரசாணை எண்.79, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்.04.05.2017

3) அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.04.02.2019

4) அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.01.2020.

5) திரு.ஞா.ராகவன்,த.பெ.ஞானதேசிகன்,எண்.2/52, பெரியார் காலனி, நிலக்கோட்டை, திண்டுக்கல் மாவட்டம் என்பவரது விண்ணப்பம் நாள்.28.06.2024.

6) நிலக்கோட்டை பேரூராட்சி மன்றத் தீர்மான எண்.164/2024, நாள்.17.10.2024.

****

உத்தரவு.–

அங்கீகாரம் செய்து இத்துடன் இணைத்திருக்கும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்தின்படி வேறுமாறுதல்களின்றி திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை பேரூராட்சி, நிலக்கோட்டை கிராமம் சர்வே எண்.394/1B2, 394/2A2 and 394/5 ல் ஏக்கர் 1.59 (6444.00 சதுர மீட்டர்) 30 மனையிடங்களுக்கு புதிதாக உத்தேச குடியிருப்பு மனைபிரிவுக்கு தொழில்நுட்ப அனுமதி திண்டுக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் ந.க.எண்.06XME49F/2023/TCP, நாள்.07.09.2023 என அனுமதி எண்.SWP /DTCP/ திண்டுக்கல்/ மனைப்பிரிவு 164/2023என எண்ணிடப்பட்ட மனைபிரிவுகளுக்கு உள்ளாட்சி அமைப்பில் இறுதி ஒப்புதல் செய்ய வேண்டி பார்வை 6ல்காணும் நிலக்கோட்டை பேரூராட்சி மன்றத் தீர்மான எண்.164/2024, நாள்.17.10.2024ன் தேதியில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மேலும் திட்டமில்லாத பகுதிக்கான நில உபயோக மாற்ற விதிகள் 2017 எண்.(3)ன்படி கூர்ந்தாய்வு கட்டணங்கள் மற்றும் நிலப்பயன் மாற்றுக் கட்டணமாக 1899ம் ஆண்டு இந்திய முத்திரைச்சட்டம் (மத்திய சட்டம் 2/1899) உட்கூறு AA பிரிவு 47ன் கீழ் சந்தை மதிப்பில் 3 விழுக்காடு நிர்ணயம் செய்தும் அதனை உரிய அரசு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் மேற்கண்ட சர்வே எண்.394/1B2, 394/2A2 and 394/5 ல் ஏக்கர் 1.59 (6444.00 சதுர மீட்டர்) 30 மனையிடங்கள் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் செய்து இதன் மூலம் அங்கீகாரம் அளிக்கப்படுகிறது.

...2...

Scanned with OKEN Scanner

மனைப்பிரிவு நிபந்தனைகள்

1. மனைகள் மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்ட திண்டுக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் ந.க.எண்.06XME49F/2023/TCP, நாள்.07.09.2023 என அனுமதி எண்.SWP /DTCP/ திண்டுக்கல்/ மனைப்பிரிவு 164/2023 என எண்ணிடப்பட்ட வரைபடத்தின்படி எல்லைக் கற்களால் வரையறுக்கப்பட வேண்டும். தமிழ்நாடு ஊராட்சி கட்டிட விதிகள் 1997ன்படி ஏற்படுத்தப்பட்ட தார் கற்களை கொண்டு மனுதாரரால் நிர்வாக அதிகாரியால் நிர்ணயிக்கப்பட்ட மட்டத்திற்கும், அகலத்திற்கும் தார்ச்சாலை அமைக்கப்பட வேண்டும்.
2. அத்தோடு தேவையான பாலங்கள், சாக்கடை வடிகால், துப்புரவு வசதி தெரு விளக்கு ஆகிய வசதிகளை நிர்வாக அதிகாரியின் கருத்திற்கேற்ப மனுதாரர் அமைத்து தர வேண்டும்.
3. நகர் ஊரமைப்பு துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள் சாலைகளின் அமைப்புகள், அளவுகள் பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.
4. அங்கீகரிக்கப்பட்ட இம்மனைபிரிவில் உத்தேசிக்கப்பட்டுள்ள சாலைகளை மனைப்பிரிவு விண்ணப்பதாரர்கள் / உரிமையாளர் முறையாக அமைத்தது அல்லது அதற்குரிய கட்டணத்தை செலுத்தி நிலக்கோட்டை பேரூராட்சிக்கு உரிய படிவத்தில் பதிவு செய்து பொதுச்சாலையாக பராமரிக்க நிலக்கோட்டை பேரூராட்சி· செயல் அலுவலருக்கு தானமாக ஒப்படைக்கப்பட வேண்டும்.
5. மேற்படி சாலைகளை பொதுச்சாலையாக சர்வே காலங்களில் வரையறை செய்வதற்கான உட்பிரிவு தொகையையும், நிலக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலருக்கு செலுத்துதல் வேண்டும். இதை நடைமுறைப்படுத்த மனுதாரர்களிடமிருந்து சாலைகளை ஒப்படைப்பு செய்வதற்கான உட்பிரிவு கட்டணத்தொகையை பெறும் வகையில் பத்திரத்தில் மனுதாரரின் கையொப்பம் பெற வேண்டும். மேலும் உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சி பெயருக்கு மாற்றி வருவாய் துறை சர்வே எண் உட்பிரிவுகள் செய்து அதற்கான விபரங்கள் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படும்.
6. விரிவு அபிவிருத்தித் திட்டப்பகுதியில் அமையும் மனைப்பிரிவு எனில் திட்ட விதிகளின்படி மனையின் பரப்பு 50 விழுக்காட்டிற்கு மேல் கட்டிடம் கட்டப்பட கூடாது. கட்டிடம் கட்டாமல் விடப்படும் திறந்தவெளியினை தோட்டமாகவோ, திறந்த முற்றமாகவோ தனிப்பட்ட பயன்பாட்டிற்காகவோ துப்புரவாக பராமரித்தல் வேண்டும்.
7. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.
8. கடைக்கல் போடத்தேவையான அளவிற்கு அதிகமாக தரையை சமன்படுத்தவோ, நிலச்சரிவை சீர் செய்யவோ மனையிலிருந்துமண் தோண்டி பள்ளங்கள், குழிகள் ஏற்படுத்தவோ கூடாது.
9. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம், விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவு வாயிலில் 6x4 என்ற அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்கு நிரந்தரமாக வைக்கப்பட வேண்டும்.

..3..

Scanned with OKEN Scanner

10. தமிழ்நாடு வீட்டு வசதி மனைப்பிரிவு மனையின் பரப்பு 10 சதுர மீட்டருக்கு குறைவாக இருந்ததால் கட்டிட விதிகள் மட்டுமே பொருந்தும்.
11. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறிவிக்கப்பட்டால் அல்லது மனைப்பிரிவுக்கு தொழிநுட்ப ஒப்புதல் வழங்கியுள்ளதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழிநுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களால் இரத்து செய்யப்படும்.
12. மேற்படி மனைபிபிரிவுக்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும்போது அங்கீகார நிர்வாக அதிகாரியின் முன்னிலை நடவடிக்கையின் உள்ளாட்சியிடம் ஒப்படைத்தற்கான சான்றும் இணைக்கப்பட வேண்டும்.
13. நகர் ஊரமைப்புத்துறை துணை இயக்குநர், திண்டுக்கல் அவர்களின் தொழில்நுட்ப அனுமதியில் தெரிவித்துள்ள நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டும், மேற்படி மனைப்பிரிவில் அடிப்படை வசதிகள் சம்பந்தமாக குறைகள் கண்டுபிடிக்கும்பட்சத்தில் தங்களது மனைப்பிரிவு அங்கீகார உத்தரவு எவ்வித முன் அறிவிப்பின்றி உரிய நடவடிக்கைக்கு உட்படுத்தப்படும் என்பதை தெரிவிக்கப்படுகிறது.

18/12/2024

செயல் அலுவலர்,
நிலக்கோட்டை பேருராட்சி,
திண்டுக்கல் மாவட்டம்.

18/12/24

(1/2)

இணைப்பு.–
வரைபடம் மற்றும் உத்திரவு நகல்.

பெறுநர்

திரு.ஞா.ராகவன்,
த.பெ.ஞானதேசிகன்,
எண்.2/52, பெரியார் காலனி,
நிலக்கோட்டை, திண்டுக்கல் மாவட்டம்

நகல்.–
1) திண்டுக்கல் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், திண்டுக்கல் அவர்களின் தகவலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.
2)நிலக்கோட்டை சார்பதிவாளர், மாவட்ட பதிவாளர் அலுவலகம், திண்டுக்கல் அவர்களின் நடவடிக்கைக்காக அனுப்பப்படுகிறது.

Scanned with OKEN Scanner



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate